இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 198 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 15 – வியாழக்கிழமை 27 பிப்ரவரி 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 198 : Thiruvalluvar Year - 2056 - Maasi 15 - Thursday 27 February 2025 - Dak 16 Pages ₹ 5.00


## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் – 2

# வஞ்சகத்தை எதிர்ப்போம் ! வளமான தமிழ்நாட்டைக் காப்போம் !



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் இந்தித் திணிப்புக்கு எதிரான இரண்டாவது மடல்.**

இந்தியை தி.மு.க. ஏன் இன்னமும் எதிர்க்கிறது என்று நம்மை நோக்கிக் கேட்பவர்களுக்கு, உங்களில் ஒருவனான நான் அன்போடு சொல்லக்கூடிய பதில், “இன்னமும் நீங்கள் அதைத் திணிப்பதால்தான், நாங்கள் அதனை எதிர்க்கிறோம்” என்பதே. திணிக்காவிட்டால், எதிர்க்கமாட்டோம். அதைத் தடுக்க மாட்டோம். தமிழ்நாட்டில் இந்தி எழுத்துகளை அழிக்கமாட்டோம். **தமிழர்களின் தனித்துவமான குணம் என்பது சுயமரியாதை உணர்வு. அதனை சீண்டிப் பார்க்க எவர் நினைத்தாலும் அனுமதிக்க மாட்டோம்.**

> **தமிழர்களின் தனித்துவமான குணம் என்பது சுயமரியாதை உணர்வு. அதனை சீண்டிப் பார்க்க எவர் நினைத்தாலும் அனுமதிக்க மாட்டோம்.**

“ரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துகளை அழித்துவிட்டால் வடமாநிலப் பயணிகள் எப்படி ரயில் நிறுத்தங்களை அடையாளம் காண்பார்கள்?” என்று இங்கேயுள்ள பா.ஜ.க. நிர்வாகிகள் சிலர் கேட்கிறார்கள். அவர்களுடைய இந்த உணர்வு நியாயமாக தமிழ் மீது இருந்திருக்க வேண்டும்.

நம்மைக் கேட்பதற்கு பதில், பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடமும், இந்தித் திணிப்பில் தீவிரமாக இருக்கும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் யாதவ் ஆகியோரிடமும், “காசி தமிழ்ச் சங்கமம் என்று நடத்துகிறீர்களே, கும்பமேளா நடக்கிறதே, **அதற்கு தமிழ்நாட்டிலிருந்தும் தென் மாநிலங்களில் இருந்தும் உத்தரப்பிரதேசம் செல்லும்பயணிகள்புரிந்துகொள்ளும் வகையில் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளில் பெயர்ப்பலகைகளை வைத் திருக்கிறீர்களா? இந்தியாவில் உள்ள மாநில மொழிகளைச் சமமாக மதித்து அறிவிப்புகளைச் செய்கிறீர்களா?”** என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்?

தமிழ்ப் பகையையே கொள்கையாகக் கொண்டு, தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் இயக்கத்தில் இணைந்திருப்பவர்கள் தமிழுக்காக–தமிழர் நலனுக்காக எப்படி குரல் கொடுப்பார்கள்? திராவிட இயக்கத்திற்கு எந்த மொழி மீதும் பகை கிடையாது. **தமிழ், வேறு எந்த மொழியையும் எதிரியாகக் கருதி அழித்ததில்லை. பிற மொழிகள் தன் மீது ஆதிக்கம் செலுத்த நினைத்தால் அதனை ஒருபோதும் அனுமதித்ததில்லை.** அவற்றை விரட்டியடிக்கும் என்பதுதான் நமது பண்பாட்டு வரலாறு.

திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் அமைப்பான நீதிக்கட்சியை உருவாக்கிய தலைவர்களில் ஒருவரான பிட்டி. தியாகராயர் அவர்கள் தனது இல்லத்திலேயே சமஸ்கிருதம் உள்ளிட்ட பாடங்களைப் படிக்க விரும்புகிறவர்களுக்கு சாதிபேதம் பார்க்காமல் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தவர்.

நீதிக்கட்சி ஆட்சியின் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்று வகுப்புவாரி இடஒதுக்கீட்டிற்கான அரசாணையைப் பிறப்பித்தவரும், இந்து அறநிலையச் சட்டத்தை உருவாக்கிய வருமான பனகல் அரசர் இராமராய நிங்கர் அவர்கள் சமஸ்கிருதத்தில் உரையாற்றக் கூடிய அளவிற்கு அந்த மொழியை அறிந்திருந்தவர்.

அந்த நீதிக்கட்சியின் தலைவராக இருந்த ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களும், மறைமலையடிகள் போன்ற தமிழறிஞர்களும், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்து நின்று 1937 முதல் 1939 வரையிலான காலகட்டத்தில் முதல் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் முதன்மையாக நின்றனர். காரணம், சென்னை மாகாணத்தில் இருந்த பள்ளிகளில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தலைமையிலான அரசு இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி, வலிந்து திணித்ததால்தான்.

## உங்களில் ஒருவன்

சென்னை மாகாணமாக இருந்த அன்றைய தமிழ்நாடெங்கும் ஆதிக்க இந்திக்கு எதிராக கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. மாநாடுகள் நடத்தப்பட்டன. துறையூரில் 1937ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் நாள் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமையேற்றவர் 28 வயது இளைஞரான அறிஞர் அண்ணா அவர்கள்.

அந்த மாநாட்டில் தலைமையுரையாற்றும்போது, “எந்த ஆட்சி வந்தாலும் சரி, தமிழர் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவைகள் சில உள்ளன” என்றார் அண்ணா. தமிழரின் ஜீவநாடியாக இருப்பதில் முதன்மையானது என்று அண்ணா குறிப்பிட்டது தமிழ்மொழியைத்தான்.

**“நாம், தமிழர் என்பதைக் காட்டுவது தமிழ்மொழிதான். இதற்கு ஆபத்து வந்துவிட்டால் நமது ஒற்றுமை, கலை, நாகரிகம் யாவும் நாசம். ஆகவே தமிழைக் காப்பாற்றுங்கள்”** என்று தந்தை பெரியாரின் தளபதியான பேரறிஞர் அண்ணா அறைகூவல் விடுத்தார்.

தாய்மொழியைக் காத்திட தமிழ்நாடு திரண்டது. இன்றைய தமிழ்நாட்டு பா.ஜ.க.வினர் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் உயர்த்திப் பிடித்து, ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற சமூக நீதித் தத்துவத்தைக் கொண்ட தமிழைப் பின் தள்ள நினைக்கும் எண்ணம் கொண்டவர்கள் அப்போதும் இருந்தார்கள்.

இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கிய அன்றைய இராஜாஜி அரசின் செயலை வரவேற்றதுடன், மேல்நிலை வகுப்புகளில் சமஸ்கிருதத்தை விருப்பப் பாடமாக வைக்க வேண்டும் என்று பத்திரிகைகளில் தலையங்கங்கள் எழுதப்பட்டன. காங்கிரஸ் தலைவரான சத்தியமூர்த்தி அவர்கள்,


“வருணாசிரம தர்மம் காப்பாற்றப்படவும், கிராம ராஜ்ஜியம்ஏற்படவும் வடமொழியை – சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடம் ஆக்க வேண்டும்” என்று கூறினார். இவற்றையெல்லாம் எதிர்த்துதான் பெரியார் தலைமையில் போராட்டக் களம் புகுந்தனர் தமிழர்கள்.

**மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை முதலில் நுழைத்து, அதனைத் தொடர்ந்து சமஸ்கிருதத்தையும் திணித்து, தமிழையும் தமிழர் பண்பாட்டையும் சிதைக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசினுடைய திட்டத்தின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு தமிழ்நாடு முழுவீச்சாக இன்றைக்கு எதிர்க்கிறது** என்றால், அதற்கான அடித்தளத்தைத் திராவிட இயக்கத் தலைவர்கள் அன்றைக்கே வலுவாகக் கட்டமைத்திருக்கிறார்கள்.

> **தாழ்ந்த தமிழகத்தை நிமிர்த்தி உயர்த்தியது திராவிட இயக்கம். தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் வஞ்சகத்தைத் தொடர்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசாங்கம்.**

தமிழ் வளர்த்த அறிஞர்களான மறைமலையடிகள், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், தமிழவேள் உமா மகேசுவரனார், நாவலர் சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட பலரும் தாய்மொழியைக் காப்பதற்காக, தந்தை பெரியார் அவர்கள் முன்னெடுத்த இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவனான நான் இன்று (பிப்ரவரி 25) இந்தக் கடிதத்தை எழுதும்




தொடர்ச்சி 4–ஆம் பக்கம்




108

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் ஒகனேக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் ஃபுளோரைடு பாதிப்புக் குறைப்புத் திட்டம்!**



# ஒகனேக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் ஃபுளோரைடு பாதிப்புக் குறைப்புத் திட்டம்!

தமிழ்நாட்டின் வறட்சியான பகுதிகளில் கிருஷ்ணகிரி மாவட்டமும், தருமபுரி மாவட்டமும் குறிப்பிடத்தக்கவை. மாநிலத்தின் வடமேற்குப் பகுதியான இம்மாவட்டங்களில் நிலத்தடி நீரிலுள்ள ஃபுளோரைடின் அளவு 1 லிட்டர் குடிநீரில், 1.5 மில்லி கிராம் முதல் 12.4 மில்லி கிராம் வரை உள்ளதாக, குடிநீர் மாதிரிகளின் ஆய்வு முடிவுகள் வெளிவந்த நிலையில், இப்பகுதிகளில் வாழும் மக்கள் எலும்பு மற்றும் பல் சம்பந்தப்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு வருவது, தொடர்கதையாக இருந்து வந்து நிலையை மாற்றிட முனைந்தார், முத்தமிழறிஞர் கலைஞர்.

## ஃபுளோரைடின் பாதிப்பைத் தடுக்க திட்டம்

ஃபுளோரைடின் பாதிப்பைத் தடுக்கும் வகையிலும், நிலையான மற்றும் நீடித்த குடிநீர், இப்பகுதி மக்களுக்கு வழங்கும் வகையிலும், 1998-ஆம் ஆண்டு வாஜ்பாய் பிரதமராக இருந்தபொழுது கலைஞர் தலைமையிலான அரசு, ஒகனேக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் ஃபுளோரைடு பாதிப்புக் குறைப்புத் திட்டத்தை, முழுமையாக செயல்படுத்த ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடம் நிதியுதவி பெறவும் முயற்சிகள் மேற்கொண்டது. ஆனால், அவ்வேளையில், இந்தியா பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தியதால், வருத்தமடைந்த ஜப்பான், இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்குவதில், முனைப்பு காட்டாத காரணத்தால் திட்டத்தைத் தொடங்குவது கேள்விக்குறியாக இருந்தது.

இந்நிலையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு, ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த அ.தி.மு.க. மீண்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட, எந்தவித முயற்சியும் எடுக்காமல் கிடப்பில் போட்டது.

## கலைஞரின் உறுதி

2006-ஆம் ஆண்டு ஐந்தாவது முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள், திட்டத்தை மீண்டும் நிறைவேற்றிட தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். 27.01.2007 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது, முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,“ஒகனேக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இந்த வாரம்தான் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் தருமபுரி மாவட்டம், சென்று திட்ட ஆய்வை மேற்கொண்டார்கள். மைய அரசு இந்தத் திட்டத்திற்கு, ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெற மிகுந்த முன்னுரிமை அளித்து, ஜப்பான் அரசுக்குத் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தி, ஜப்பான் நாட்டு நிதியுதவி (The Japan International Cooperation Agency - JICA) கிடைக்க வாய்ப்புகளை, அதிகமாக்கி இருக்கிறது. எனினும், ஜப்பான் நிதியுதவி ஏதேனும் ஒரு காரணத்தால் கிடைக்காவிட்டால், அரசு வேறு நிதி ஆதாரம் பெற்று இத்திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றும்” என்று வாக்குறுதி அளித்தார்.

## தளபதியாரின் ஜப்பான் பயணம்

தலைவர் கலைஞரின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், அன்றைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த நம்முடைய இன்றைய முதலமைச்சர் அவர்கள் ஜப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோ சென்று, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் முதுநிலைச் செயல் இயக்குநர் டி.சியோகுசி அவர்களை 06.02.2008 அன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், ஒகனேக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் நிதியுதவி வழங்குமாறு வலியுறுத்தி, அந்த வங்கியின் ஒப்புதலைப் பெற்று வந்தார்.

இதைத்தொடர்ந்து ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி, 1,585 கோடி ரூபாய், தமிழ்நாடு அரசின் நிதி 307 கோடி ரூபாய் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்குத்தொகை, 35.72 கோடி ரூபாய் என, 1,928 கோடி ரூபாய் மதிப்பில், செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன.

**ஒகனேக்கல் குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக கலைஞர் மேற்கொண்ட அந்த விடாப்பிடியான முயற்சி, பயன்பெறும் மக்களின் மனங்களில் கலைஞரை நிரந்தரமாக அமரச் செய்யும்!**

## பயன்பெறும் பகுதிகள்!

ஒகனேக்கல் பகுதியில் காவிரியாற்றில் இருந்து 6 கி.மீ., தொலைவில் 160 மில்லியன் லிட்டர் கொள்ளளவுள்ள சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. காவிரியில் இருந்து எடுத்துவரப்படும் நீர், நவீன சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, 1.50 கி.மீ., தொலைவில் நீர் உந்து நிலையத்திற்கு நீரேற்றம் செய்யப்படும். பின்னர் அங்கிருந்து 3.40 கி.மீ. தொலைவில், மடம் கிராமத்தில் 240 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதான சமநிலை நீர்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படும்.

பின் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர் பகுதிகளில் பொ.மல்லாபுரம், அரூர், கடத்தூர், கம்பைநல்லூர், காரிமங்கலம், மாரண்ட ஹல்லி, பாலக்கோடு, பாப்பிரெட்டி பட்டி, பென்னாகரம், பாப்பாரப்பட்டி; பருகூர், காவேரிப்பட்டினம், நாகோஜனஹல்லி, ஊத்தங்கரை, மத்தகிரி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை ஆகிய 17 பேரூராட்சிப் பகுதிகளுக்கும், மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிபட்டி, பாலக்கோடு, காரிமங்கலம், பென்னாகரம், நல்லம்பள்ளி, வேப்பனப்பள்ளி, கெலமங்கலம், தளி, சூளகிரி, ஒசூர் ஆகிய 18 ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள 6,755 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் ஏறத்தாழ 30 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நீரை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டது.

இப்பணிகள் 5 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு பிரதான நீருந்து குழாய்கள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், உயர் மட்டநீர்த்தேக்க தொட்டிகள் மின் மோட்டார்கள், மின்மோட்டார் அறைகள், நீர்ச் சேகரிப்புக் கிணறுகள், நிறுவப்பட்டு டிசம்பர் 2012-ஆம் ஆண்டு திட்டப் பணிகளை முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

## திட்டத்தை சீர்குலைத்த அ.தி.மு.க.

தி.மு.கழக ஆட்சிக்காலத்தில் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வந்த நிலையில் 2011- ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அ.தி.மு.க. அரசு இத்திட்டத்தினை முழுமையாக முடிக்காமல், அவசர கதியில் தொடங்கி வைத்தது. அதன் விளைவாகப் பல்வேறு பகுதிகளில் நீர் சென்று சேர்வதில் சிக்கல் நிலவி வந்தது.

மீண்டும் 2021-இல் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, திட்டத்தை முழுமையாக செயல்படுத்தும் நோக்கில், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் ஒகனேக்கல் குடிநீர் மற்றும் ஃபுளோரோசிஸ் குறைப்புத் திட்டத்தின் (HDWFMP) இரண்டாம் கட்டப் பணிகளை நிறைவு செய்ய 7,145 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தது. கலைஞர் எந்த நோக்கத்திற்காக திட்டத்தைக் கொண்டு வந்தாரோ, அதனை முழுமைப்படுத்தும் பணிகளை தற்போதைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறார்.

ஒகனேக்கல் குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக கலைஞர் மேற்கொண்ட அந்த விடாப்பிடியான முயற்சி, பயன்பெறும் மக்களின் மனங்களில் கலைஞரை நிரந்தரமாக அமரச் செய்யும்!

...முற்றும்

## எச்சரிக்கை; சப்பாத்தி தேசிய உணவாகிவிடும்!

நாடாளுமன்றத் தொகுதிகளை அடுத்த ஆண்டில், மறுசீரமைப்பு செய்ய முடிவெடுத்திருக்கிறது ஒன்றிய அரசு. இதனால், தமிழ்நாட்டுக்கும் ஒட்டுமொத்த தென்னிந்தியாவுக்கும் ஏற்படவிருக்கிற பிரதிநிதித்துவ இழப்பைச் சுட்டிக்காட்டி அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கிறார், நமது முதலமைச்சர். இந்த விவகாரம் தொடர்பாக, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள சத்யராஜ் குப்புசாமி என்பவர்,

“இப்போது இருக்கக்கூடிய 543 மக்களவைத் தொகுதிகளை, மக்கள் தொகை சதவிகிதத்தின் அடிப்படையில் பிரித்தால், தமிழ்நாட்டின் மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 39-இல் இருந்து 31-ஆகக் குறைக்கப்படும். அதாவது எட்டு இடங்களை இழப்போம்.

மக்கள்தொகை அடிப்படையில், மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 848-ஆக அதிகரிக்க முயற்சிக்கிறார்கள். அப்படிச் செய்தால், தமிழ்நாட்டுக்கு நியாயமாக 61 மக்களவைத் தொகுதிகள் கிடைக்க வேண்டும். ஆனால், நமது மக்கள்தொகை உயர்வு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், நமக்கு 51 தொகுதிகள் மட்டுமே தருவோம் என்கிறார்கள். புதிய மக்கள்தொகையின் அடிப்படையில் தொகுதிகளைப் பிரித்தால் தென்னிந்தியாவிற்கு 201 தொகுதிகள் கிடைக்க வேண்டும். ஆனால், இவர்களோ, ‘161 தொகுதிகளை மட்டுமே தருவோம்’ என்கிறார்கள்.

இதனால் எதிர்காலத்தில், பாரதிய ஜனதா கட்சி மக்கள்தொகை அதிகமாக இருக்கிற 10 வடமாநிலங்களில் மட்டும் 80% வெற்றி பெற்றாலே, பெரும்பான்மை பலத்தோடு ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துவிடலாம். தென்னிந்தியாவுக்கு எதிராக, தமிழர்களுக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் எந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டாலும் அதை நாம் எதிர்க்கவே முடியாது என்ற சூழல் ஏற்பட்டுவிடும். அதற்குப் பிறகு ‘சப்பாத்தி தேசிய உணவு’ என்று கூட அறிவிப்பார்கள்... சப்பாத்தி சாப்பிடாதவர்கள் ‘தேச விரோதி’ என்றும் கூட சொல்வார்கள். எனவே தென்னிந்தியாவுக்கு உரிய 23% மக்களவைத் தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும். அதுவே நியாயமான பாராளுமன்ற ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும்” என்று பதிவிட்டுள்ளார்.

கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்க, இந்த ஜனநாயக அறப்போரை, ‘திராவிட மாடல் நாயகர்’ தொடங்கிவைத்தார். இந்த அறப்போரிலும் வெல்லும் தமிழ்நாடு!

## ஃப்ளாஷ்பேக்



### பிரச்சார நேரத்தில், ஒரு புகைப்படம்!


வழக்கறிஞர் என்.பிரேமராசன்

1989-ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில், அன்றைய கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், துறைமுகம் தொகுதியில் வேட்பாளராகக் களம் கண்டார். அப்போது ஏழுகிணறுப் பகுதியில் கழகப் பணியில் ஈடுபட்டிருந்த நான், தலைவரைச் சந்தித்து மலர்மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தேன். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. முரசொலி மாறன் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களுடன் வந்திருந்தார்.

**- வழக்கறிஞர் என்.பிரேமராசன், துணை அமைப்பாளர்,**
**கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை,**
**வடசென்னை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### வர்த்தக அழுத்தம்!

1999-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் அமெரிக்காவின் சியாட்டில் நகரில், ‘உலக வர்த்தக சபை மாநாடு’ நடைபெற்றது. அதில், இந்தியாவின் சார்பில் அன்றைய ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறன் கலந்துகொண்டு உரையாற்றினார். “இந்தியா போன்ற வளரும் நாடுகளின் சாதகமான அம்சங்களைத் தட்டிப் பறித்துக்கொள்ள வளர்ச்சி அடைந்த நாடுகள் முயற்சிக்கக்கூடாது” என வலியுறுத்திய மாறன், பல வர்த்தக நிபந்தனைகளுக்குக் கடும் எதிர்ப்பினைப் பதிவு செய்து, தடுத்து நிறுத்தினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

762

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131